**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE SPECIAL SUB COURT FOR MCOP CASES, MADURAI

MCOP No. 2220 / 2022

DEPOSITION OF WITNESS FOR R.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : விக்னேஷ்வரன் | Caste | : |
| Father/Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day 08/2026.

**<u>சாட்சி அழைப்பாணையின்பேரில் முன்னிலையாகி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னை, மத்திய வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் அலுவலகத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு உரிய அங்கீகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அழைப்பாணையில் கூறியுள்ள, சென்னை, சேட்பேட், பூபதிநகர், 8வது தெருவில் வசித்து வரும் தர்மன் மகன் செந்தில் என்பவருக்கு 05.07.2022ம் தேதி அன்று கனரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பது குறித்து எங்கள் அலுவலகம் மூலம் ஆவணங்களை பரிசோதனை செய்ததில் 10.03.2009 முதல் 27.12.2028 வரை போக்குவரத்து அல்லாத இலகுரக வாகனத்திற்கு வாகனம் ஓட்டுவதற்கு TN0120000001732 ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி செந்தில் என்பவருக்கு கன ரக வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் 17.04.2018 முதல் 17.04.2021 வரை செயல்பாட்டில் இருந்துள்ளது. அதன்பின்னர் 10.05.2023 முதல் 09.05.2028 வரை மேற்படி கனரக வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட காலமான 18.04.2021 முதல் 09.05.2023 வரை மேற்படி நபருக்கு கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம்புதுப்பிக்கப்படாமல்

செயல்பாட்டில் இல்லை. இது குறித்த அறிக்கை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.2 ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி செந்தில் என்பவருக்கு போக்குவரத்து வாகனம் ஓட்டுவதற்கான வில்லை எப்போது வழங்கப்பட்டது என்றால் 01.03.2022 வழங்கப்பட்டு 18.04.2021 முதல் 09.05.2023 வரையான காலம் தவிர தற்போது வரை தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுள்ளது.

(3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.)

Sd/–விக்னேஷ்வரன்

நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.08.10 17:51:06 +0530

சிறப்பு சார்பு நீதிபதி. மோ.வா.வி வழக்குகள்,
மதுரை